Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 9/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஃ (1889) ஆவணி 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-எ௨] யாழ்ப்பாணம்:- சார்வரி ஹு ஆடி மீ ௩ உ வெள்ளிக்கிழமை (15 JULY. 1960) [இல-௩௫]

அரசியல் அலை

# எல்லைத் தகராற்றில் ஈடுபட்டிருக்கும் இந்தியப் பேரரசுக்கு இன்னும் ஒரு சோதனை?

## வேலைநிறுத்தம்செய்வோரின் விபரீதமான போக்கு!

———:o:———

பாரத நாட்டுக்குப் பலவேறு விதமாக இடையூறுகளை எதிரிகள் இயற்றி வருகின்றார்கள். ஆனால் எத்தகைய இன்னலையும் அகிம்சா தர்மக் கொள்கை அடிப்படையில் நோக்கிப் பிரதமர் நேரு சமாதானமாக வழிதேட அல்லும் பகலும் அயராதுழைத்து வரும் வேளையில் பாரதநாட்டு உத்தியோகத்தர்கள் பல்லாயிரக் கணக்கானோர் கொண்ட தொழிற்சங்கம் வேலை நிறுத்தஞ் செய்யும் விபரீதத்தைப் பார்த்தால், சுயநலம் தேசாபிமானத்தையும் பொருட்படுத்தாது என்பது வெளிப்படையாகின்றது. பலர் கைது செய்யப்படுவதும் ஏழுபேர் இதுவரை இயமனுக்கிரையாயிருப்பதும் யாவர் மனத்தையும் வாட்டுகின்றன.

புறநாடுகளில் நடமாடும் அரசியல் பொருளாதாரம் முதலியவற்றின் அடிப்படைக் கொள்கைகளில் மயங்கித் தேசத்தைமறந்து நிற்கின்றவர்கள் நாட்டைப் பற்றி எண்ணுவார்களா? மக்களைப்பற்றியோசிப்பார்களா?

வேலை நிறுத்தம் என்ற பூதத்தை ஆயுதமாகக் கொண்டு எந்தக் காரியத்தையும் செய்து முடித்து விடலாமென்று உலகில் ஒரு இயக்கம் இருக்கின்றது. நியாயம், நீதி, இடம், தருணம் என்ற இவற்றைச் சற்றேனும் ஆராய்ந்து பாராது வேலை நிறுத்தஞ் செய்வதற்கு ஒழுங்கு செய்யும் அத்தனைபேரும் மனித குலத்துக்கு விரோதிகளாவார்.

நேருப்பெரியாரோ நெருக்கடி காலத்திலும் நேர்மையும் நிதானமும் கைவிடாது தேசப் பணியைப் புரிந்து வரும் அனுபவ ஆற்றல் உள்ளவர். காந்திக்கொள்கையை உண்மையாக உணர்ந்து ஒழுகுபவர் எனவே இடையூறு எதிர்நோக்கினும் இதயப் பண்பாட்டை இழக்கமாட்டார்.

———

### நற் சிந்தனை

மந்திரமாய்த் தந்திரமாய்
மருந்தாகி விருந்தாகி
ஏந்திரமாய் என்துணையாய்
எல்லாமா யல்லவுமாய்ச்
சந்திரனுய்ச் சூரியனுய்ச்
சரமசரம் யாவுமாய்
எந்தைபிரா னிருந்தநிலை
கண்டார்கள் பிறவாரே.

(சிவ தொண்டன்)

## கதிர்காம உற்சவ வழிபாடு

### நல்லூர்க் கந்தசுவாமிகோயிலிற் சிறந்த ஒழுங்குகள்

நிகழும் சார்வரி வருஷம் ஆடி மாதம் 8-ம் திகதி சனிக்கிழமை (23-7-60) முதல் ஆடி மாதம் 23-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை (7-8-60) வரையுள்ள 16 நாட்களும் கதிர்காம உற்சவ தின விழா நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தில் நிகழ்ச்சி நிரலின் படி நடைபெறத் திருவருள் பாலிததிருக்கிறது.

நிகழ்ச்சி விபரங்கள்:

ஆடி மாதம் 8-ம் திகதி (23-7-60) சனிக்கிழமை

மாலை 3 மணி—விநாயகப்பெருமானுக்கு விசேட ஆராதனை; அபிஷேக ஆராதனையுடன் உறசவதின ஆரம்பம்.

மாலை 4 மணி—முருகப்பெருமானுக்கு விசேட அபிஷேகமும் சண்முக அருச்சனையும்.

மாலை 6 மணி—சன்னிதியில் "பஜனை" பின்முருகநாயக "பஜனை"க்கோஷ்டி ஆலயம்வலம்வருதல்.

இரவு 8-30 மணி — கந்தரலங்கார விரிவுரை

ஹரிகதா சிரோன்மணி,
அகில இலங்கை சங்கீத வித்வசபையின் தலைவரும்,
நல்லூர்த் தேவஸ்தானப் பிரசாரகரும்,
மதுரை ஆதீன முத்தமிழ்மணி
வண்ணை ஸ்ரீ. வி. எஸ். எஸ், மணிபாகவதர் அவர்கள்
பக்கவாத்தியங்களுடன் நிகழ்த்துவார்கள்,

இரவு 10 மணி — விசேட மண்டபப்படியும் ஆராதனையும், 23-7-60 முதல் 7-8-60 வரை மாலை 4 மணி முதல் மேற்குறிப்பிட்டபடி நிகழ்ச்சிகள் நடைபெறும். உற்சவ காலத்தில் 9-30 க்கு மேல் விரிவுரை நடத்தப்படும்.

கதிர்காம தினத்தன்று நிகழ்ச்சிகள்:

7-8-60 ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி — அஷ்டோத்திர சங்காபிஷேகம்.

மாலை 2 மணி—முருகபக்தர்கள் வீரமாகாளி அம்மன் கோவிலிலிருந்து பாற்காவடியும், ஆனந்தக் காவடியும் எடுத்து முருகன் சந்நிதிக்கு வருதல்.

முருக பக்தர்கள் கதிர்காம வேலனின் தினங்களில் மிகவும் தூய்மையுடனும் பக்தி சிரத்தையுடனும் பங்குபற்றி முருகன் திருவருளைப்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம் என்று கந்தனின் அடியார்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

# வேல் விழாவைத் தூய்மைப்படுத்தி சமயஉண்மைவிளங்கச்செய்க

### கொழும்புஇந்துவாலிபர்சங்கவேண்டுகோள்

"கொழும்பில் ஆண்டுதோறும் நடக்கும் ஆடிவேல் விழாவில் வேடிக்கை விநோதங்கள் மிகுந்ததின் விளைவாக, எமது சமயமே குறைவாகக் கணிக்கப்படுவவையிட்டு வருத்தந்தெரிவிப்பதுடன், இனிமேலாவது வேல் விழாவைத் தூயமுறையில் நடத்தி மக்களிடையே சமய உணர்ச்சியைப் பரப்பும்படி வேல் விழாக் குழுவினரை, கொழும்பு இந்து வாலிபர் சங்கம் வேண்டுகிறது."

மேற்கண்ட பிரேரணை 7-7-60 ல் நடைபெற்ற இந்து வாலிபர் சங்கச் செயற்குழுவின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறிய து.

கொழும்பு இந்து வாலிபர் சங்கத்தின் சார்பில் அதன் இணைச் செயலாளர்கள் சோ. பத்மநாதனும், நா. சோமகாந்தனும் ஓர் அறிக்கையை விடுத்துளளார்கள். அதன் சில பகுதிகள் கீழே காணவருகின்றன:-

"இந்த நடவடிக்கை எடுப்பதனால் நாம் வேல் விழாவையே எதிர்ப்பதாக யாரும் கருதக்கூடாது, இந்த விழா உண்மையான சமய விழாவாக நடைபெற வேண்டுமென்பதில் எமக்கு மிகவும் அக்கறையுண்டு.

வேல் விழா நடைபெறும் கோயிற்புறத்திலேயே கடைகளும் இராட்டினங்களும் பிற பொழுதுபோக்குப் பொருட்களும் மிகுந்தமையால் ஆலயத்தின் புனிதத் தன்மை மாசுபடுகிறது. வேல் விழாவை ஒரு களியாட்ட விழாவாகக் கருதிச் செல்பவர்கள் மிகுந்தமையால் முறையான வழிபாடு செய்வதற்கே இடையூறு ஏற்படுகிறது.

"வேல விழாவை ஒரு களியாட்ட விழாவாக நடத்திப் பெரிய கூட்டத்தை வரவழைப்பதைவிட, ஒரு சிலராயினும் மெய்யன்போடு வேலை வழிபடின் அதனால் பெரும் பயன் விளையும். வழக்கமாகக் கோயிலுக்குப் போகாதவர்களும்கூட வேடிக்கை விநோதங்களைக் கண்டுகளிக்கப் பெருந்திரளாகக்கூடுவதே எமது கூற்றுக்குப் போதிய சான்றாகும்.

ஏராளமான பணச்செலவில் நடைபெறும் இந்த விழா

### குன்றக்குடி அடிகளார் வருகை

கொழும்பில் நடக்கும் ஆடி வேல் விழாவின் போது குன்றக்குடி அடிகளார் இலங்கைக்கு வருகின்றனரென அறியவருகின்றது. ——

### சிங்களம் தெரியாதவர்களுக்கு இடமாற்றம்

1961-ம் ஆண்டு தை (ஜனவரி) 1-ந் திகதியிலிருந்து அரசாங்கக் கருமங்களெல்லாம் தனிச் சிங்களத்தில் நடைபெறும்பொழுது சிங்கள மொழி அறிவு இல்லாதவர்கள் ஆங்கிலத்திற் கடமையாற்றத்தக்க இடங்களுக்குப் படிப்படியாக மாற்றப்படுவார்களென அறியவருகின்றது, ——

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதைபோல, நன்மைபயப்பதற்குப் பதில் தீமை விளைவிப்பதை நாம் கண்ணாரக் காண்கிறோம். நாம் இவற்றைச் சுட்டிக்காட்டுவது வேல் விழா சிறப்பாக நடக்க வேண்டுமென்ற பெருநோக்கம்பற்றியே என்பதை மீண்டும் வற்புறுத்துகிறோம்.

## மகாத்மாபற்றிப் புது நூல்

விஸ்கான்சி பார்க்வெர்மான்ட் (யு. எஸ்) செண்ட்மைக்கல் கல்லூரியில் ஆட்சி இயல் துணைப்பேராசிரியராக இருக்கும் "டாக்டர்" பால் எப். பலர் "உலக விவகாரங்கள் பற்றி காந்தி" என்னும் தலைப்பில் ஒரு புதிய புத்தகம் எழுதியுள்ளார்.

வாஷிங்டனினுள்ள பொது விவகார அச்சகம் அதனை வெளியிட்டுள்ளது. நியூயார்க் பல்கலைக்கழகத்தில் "டாக்டர்" மார்லி ஆயீரஸ்ட் என்பவரின் மேற்பார்வையில் "டாக்டர்" பட்டம் பெற அவர் செய்த ஆராய்ச்சி இந்நூலின் ஒரு பகுதியில் அடங்கியுள்ளது. "காலனி" ஆதிக்கத்தினின்று சுதந்திரத்துக்கு வழிகாட்டிய ஒரு இந்தியர் மீது அவருக்குள்ள அக்கறையை நூலில் நாம் காணலாம்

மூன்று கண்டங்களில் முக்கால் நூற்றாண்டுக்காலம் வாழ்ந்தவர்கள் ஆற்றியஅரும் பணியே அந்தப் புத்தகத்தின் முதற்பகுதி, மற்ற அத்தியாயங்களில் "அரசியல் தத்துவம்", "போரும் உலகமும்", "மேல்நாடும் மேல்நாடு அல்லாதவையும்", "உலக விவகாரங்களில் இந்தியாவின் பணி", "தொகுப்பும் மதிப்பீடும்" என்பவைபற்றிக் கூறப்பட்டுள்ளன.

(அ. செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

ஆடி 5௳ புதன்கிழமை(20-7-60) பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் பொருட்டும், ஆடி 7—8-ம் ௳ வெள்ளி சனி (22 — 23-7-60) மாவிட்டபுரம் தேர் தீர்த்தோற்சவங்களின் பொருட்டும் சைவப்பிரகாச அச்சு யந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் மூடப்பட்டிருக்குமென்பதை அன்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

—அதிபர்.

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர்வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே,
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சார்வரி ௵ ஆனி ௴
௩௨ ௳ வெள்ளிக்கிழமை

## அரசியலுக்குரிய பெருமையை அளியுங்கள் (II)

மக்கள் ஆட்சி முறையிலே அரசியலுக்குக் கல்வி அறிவு இன்றியமையாத தொன்றன்றென்று எண்ணுவாருமுளர். கற்கவேண்டியவற்றைக் குற்றம் இல்லாதொழியக் கற்று அக்கல்விக்கேற்ப நெறி நிற்றல் அரசியலுக்கு மிகவும் வேண்டப்பெறும் என்று வள்ளுவனர் வரைந்துள்ளார். இலங்கு நூல் கல்லாதவர்களும் நுண்மாண் நுழைபுலம் இல்லாதவர்களும் அரசியற்புகுதல் ஆகாது என்பதே திருக்குறள் ஆசிரியர் கருத்தாகும்.

ஆகவே, அரசியலில் ஈடுபட்டு மக்கள் ஆதரவைத் தேடிப் பாராளுமன்றஞ் செல்ல எண்ணுகின்றவர்கள் கற்றவராய்க் கேள்விச் செல்வமுடையவராய் எப்பொருளின்தும் மெய்ப் பொருளைக் காணும் அறிவுடையவராய் அமைதல் வேண்டும் என்பது தமிழகப் பண்பாகும்.

பிறர் குற்றம் ஆராய்வதே அறிவுக்குச் சான்றாகும் என்று நினைக்கின்றவர்கள் இக்காலத்தில் அரசியலில் ஈடுபடுகின்றவர்களில் அநேகர். அரசியல் ஒழுக்க நெறிக்கு இத்தன்மை பொருந்தாது. என்னை? தன் குற்றம் நீக்கியபின் அன்றே பிறர் குற்றம் நோக்குதல் வள்ளுவர் வகுத்த நெறியாதலின்;

பெரியாரைப் பேணுவதும் சிற்றினத்தைக்கண்டு அஞ்சுவதும் அரசியலுக்காதாரமான ஒழுக்கமாகும். ஆட்சிபீடத்தில் அமருவதற்காக அரசியற்றலைவர்கள் சிற்றினத்தார் என்று பழிபாதகச்செய்கைகளால் மக்களாற் கண்டிக்கப்பட்டவர்களுடன் சேர்ந்து முன்னணி அமைத்தல் அரசியலுக் கிழுக்கை உண்டு பண்ணும் செயலாகும்,

நல்லினத்தி னூங்குந்
துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்
என்பது வள்ளுவர் வாக்கு.

செயலாற்றும் அரசியற்றலைவர்கள் எந்நெறியில் நின்று பணியாற்றவேண்டும் என்பதை ஆராய்வது நன்று. எண்ணித் துணிக கருமம் என்ற பொய்யாமொழியை அரசியலார் எண்ணுவதரிது. துணிந்தபின் எண்ணி இழுக்குடைய ராவார் கையில் அரசியற் பொறுப்பை அளிக்கார் அறிவுடையார். அரசியற் றலைவர்கள் தங்கள் திட்டங்களின் வலிமையை ஆராய்ந்து அவற்றைச் செயல் முறையிற் கொண்டு வருதல் வேண்டும். திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தங்கள் வலிமை எத்துணைத்து பகைவர் வலிமை எத்துணைத்து என்றெல்லாம் ஆய்ந்து பருவம் பார்த்திடனறிந்து முயல்வதே அரசியல் முறையாகும்.

இக்கால மக்கள் ஆட்சி முறையில் அரசியற் கட்சிகள் அரசு நடத்த முன் வரும்பொழுது நெறி பிறழ்ந்து ஒருவரை ஒருவர் தெளியாமல் ஒன்று கூடிப் பின் அல்லற்படுவது வழக்கம். இது ஆகாது என்பதைத்

"தேரான் பிறனைத் தெளிந்தான்
வழிமுறை
தீரா இடும்பை தரும்",

என்னும் பொய்யாமொழிப் புலவர் பொன் வாக்கு எடுத்துக் காட்டுகின்றது.

## கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை

—:0:—

### கார்த்திகை — 1960.

வடமாகாண ஆசிரிய சங்கத்தினால் நடாத்தப்படும் இப் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் பாடசாலை மாணவர்களிடமிருந்து 25-9-60 க்கு முன்பாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளிடமிருந்து 1-8-60 க்கு முன்பாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பப் பத்திரங்களைக் கீழ்க்காணும் விலாசத்திற் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

1960 — 1961 பரீட்சைக்குழு உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:-

தலைவர், திரு C. வைரமுத்து
வைத்தீஸ்வர வித்தியாலயம், யாழ்ப்பாணம்.

காரியதரிசி, திரு. C. குணபாலசிங்கம்
இந்துக்கல்லூரி, கொக்குவில்.

உபகாரியதரிசி, திரு. T. பாலசுப்பிரமணியம்
பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி

**பழைய வினாப்பத்திரங்கள்** தேவையானோர் யாழ்ப்பாணத்திலுள்ள புத்தகசாலைகளில் வாங்கிக்கொள்ளலாம்

1961-ம் ஆண்டிற்குரிய பாடத்திட்டங்கள், புத்தகங்கள் ஆதியனபற்றிய கருத்துக்களை 28-7 60 க்கு முன் தெரிவிக்கும்வண்ணம் கல்லூரி அதிபர்களும் மற்றையோரும் வேண்டப்படுகின்றனர்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

C. குணபாலசிங்கம்
கௌரவகாரியதரிசி.

M 70 15-7-60

## துப்பறியும் சுப்புமாமா

### பிரளயம் பின்வாங்கிவிட்டது

—:—




பதினைலாந்திகதி ஆடி மீ என்றவுடன் படலையைப் பூட்டி வீட்டுவாசல்களைப் பூட்டி கோடிக்குள் ஆகாய விமானத் தாக்குதலுக்கு யுத்தகாலத்திலே தோண்டிய கிடங்கினுள்ளே பதுங்கி இருபத்துநான்குமணித்தியாலமும் ஊணின்றி உறக்கமின்றி உள்ளந் துடித்த சுப்புமாமா விடிந்ததும் பெருமூச்சு விட்டு அட அநியாயமே, ஒரு புயலாவது வீசப்படாதா, இரண்டு மரங்கள் முரிந்து வீழக்கூடாதா, மூன்றுபேராவது முடிந்து விட்டார்கள் என்றபடி ஏதும் விபத்து நடக்கப்படாதா? என்று கோபித்தவண்ணமாய் வெளியேறினகதைதான் பிரளயக் கட்டுக்கதையிலும் விநோதமானதாய் முடிந்தது. தேர்தற் பிரளயம் நடைபெறும்பொழுது வேறு பிரளயத்துக்குமிடமுண்டா என்று தேற்றிக்கொண்டார் சுப்புமாமா.

### நகரசபை அலுவலகத் திறப்பு

[illegible] யாழ்ப் பாண நகரசபை அலுவலகம் புதன்கிழமை காலையில் திறக்கப்படலாயிற்று.

# மாவிட்டபுர மகிமை



தேர் தீர்த்தம் 22, 23-7-60

(1-7-60 தொடர்ச்சி —2)

மதவெறி கொண்ட போர்த்துக்கீசரால் கந்தசுவாமி கோவில் ஆலயம் சிதைக்கப்பட்டது. பின்னர் இரண்டு நூற்றாண்டுகளின் பின்னர் கந்தசுவாமி கோவில் புத்துயிர்பெற்றது. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் (1876-ல்) சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் சபாபதிக் குருக்கள் அவர்களின் பெருமுயற்சியால் ஆலயம் உருவாகியது.

சில வருடங்களில் ஆலயம் வளர்ச்சி பெற்றது. கருப்பக்கிரக மண்டபம் முழுக் கருங்கல்லினால் அமைக்கப்பட்டு 1929-ம்

ஸ்ரீ இ. சுந்தரராஜ சர்மா

ஆண்டு சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் காலத்தில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

மேற்கு வாயிலில் அமைந்துள்ள கார்முகிலை முட்டும் இராஜ கோபுரம் 1954-ம் ஆண்டு வைகாசி மாதம் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. அதே ஆண்டில் துவஜஸ்தம்பம் வெள்ளியினால் செய்யப் பெற்றது.

தற்போது மஹாமண்டபம் கருங்கல்லால் அமைப்பதற்கான ஆக்கவேலைகளில் சிவஸ்ரீ சு. துரைசாமிக்குருக்கள் அவர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

கந்தசுவாமி கோவிலின் சிறப்புகள் பல. அவற்றுள் பஞ்சரதங்கள் அணிவகுத்து வரும் இரதோற்சவம் குறிப்பிடத் தக்கது.

இவ்வருட மகோற்சவம் 29-6-60 தொடங்கி நடைபெற்று வருகிறது. கார்த்திகைத் திருவிழா வருகிற திங்கட்கிழமை (18-7-60) தண்டிகை உற்சவமும் வேட்டைத் திருவிழாவும் (20-7-60) புதன்கிழமை. பெரிய சப்பறம் 21-7-60. இரதோற்சவம் 22-7-60 வெள்ளிக்கிழமை. 23-7-60 தீர்த்தோற்சவத்துடன் திருநாட்கள் முடிவடைகின்றன.

## ஸ்ரீ நடராசமூர்த்திக்கும் அப்பாளுக்கும் சிறந்த சாத்துப்படி

—0—

நாட்டுக்கோட்டை நகர செட்டியார்களின் மரபைச் சார்ந்துள்ள நாட்டரசங் கோட்டை திருமதி. மீனாட்சி ஆச்சி என்ற அம்மையார், சிதம்பரத்திலுள்ள ஆறுமுக நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தருமபரிபாலகர்களில் ஒருவரான "சாகித்ய கர்த்தா" பிரம்மஸ்ரீ. வி வி சுவர்ணவெங்கடேச தீக்ஷிதரின்மூலம் சுமார் 2000 ரூபாய் செலவில் (30 பவுன் எடையில்) ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு ஓங்காரம் சித்திரிக்கப் பெற்ற பெரிய தங்கப்பதக்கமும், கைச்சங்கிலியும் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாளுக்கு 21 பவுன் எடையில் காசுமாலையும் அழகான முறையில் செய்து சாத்துப்படி செய்துள்ளார்கள்.

திருமதி மீனாட்சி ஆச்சி அவர்கள் இதற்கு முன்னர் பிரம்மஸ்ரீ வி. வி. சுவர்ண வெங்கடேச தீக்ஷிதர் பூசை செய்யும் காலத்தில் கைகளில் தங்கத்தோடாக்கள் போட்டுக் கொண்டு பூசை செய்வதற்கு

(தொடர்ச்சி 5ம் பக்கம்)

## கைலஞ்சக் குற்றச்சாட்டுத் தீர்ப்பு

ஸ்ரீ ரி.பி.மொன்னகுலம, ஸ்ரீ ஆ. ஈ. ஜயதிலக, ஸ்ரீ. ஹென்றி அபயவிக்கிரம ஆகிய மூவரும் கைலஞ்சம் வாங்கியதாக கைலஞ்ச விசாரணைக்குழுவினர் தீர்ப்பளித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக வரலாறு

(முன்னிதழ்த் தொடர்ச்சி)

# போர்ணியோவிற் சைவ சமய சாதனை

## சான்றாய் விளங்கும் உருவச் சிலைகள்

**26 போர்ணியோவும் பாலியும்**

போர்ணியோவில் இந்தியப் பண்பாடு பரவியிருந்தது என்பதை அங்கு கிடைத்த சாசனங்கள் வெளியிடுகின்றன. இச் சாசனங்கள் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் பொறிக்கப்பட்டவை. பிராமணர்களுக்குப் பசுக்களும் பொன்னும் தானமாக வழங்கப்பட்டதை இவை குறிப்பிடுகின்றன. பிராமணர் போர்ணியோவில் முதன்மை பெற்றிருந்தார்கள். அரண்மனையில் இவர்களின் கிரியைகள் முக்கியம் பெற்றிருந்தன. போர்ணியோவில் கல்லிற் செதுக்கப்பட்ட உருவச் சிலைகள் பல அகழ்ந்து எடுக்கப்பட்டன. அவை சிவன், கணேசர், நந்தி, அகத்தியர், பிரமா, மகாகாவலர் முதலியவர்களின் திருவுருவங்களாகவுள்ளன. மேற்குப் போர்ணியோவில் புத்தரின் ஏழு உருவங்களும் பல போதி சத்துவரின் உருவங்களும் கண்டுபிடிக்கப்பட்டன. இவை இந்தியச் சிற்பிகளின் வேலைப்பாடுகளாகவிருக்கின்றன. கிழக்கு போர்ணியோவில் மரத்தினுல் எடுக்கப்பட்ட பழங் கோயிலில் சிவபெருமான் புத்தர்பெருமான் ஆகியோரின் அழகான கற்சிலைகள் உள்ளன. அவை கி. பி. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என ஆராச்சியாளர் துணிகின்றனர். போர்ணியோ மக்கள் பல்லவர்களிடமிருந்து எழுத்தெழுதும் முறையைக் கற்றனர். "போர்ணியோவின் ஒரு பகுதியான கூட்டை (Koetai) பிராந்தியத்தைச் சேர்ந்த கல்வெட்டுக்களின் எழுத்து, பல்லவ மன்னரான மகேந்திர வர்மனின் மகேந்திரவாடி, தளவனூர்ச் சாசனங்களின் எழுத்தை ஒத்திருப்பது இங்கு நோக்கத்தக்கது. பல்லவ சாசனங்களில் வழங்கிவந்த கிரந்தஎழுத்து போர்ணியோ ஜாவாத் தீவுகளில் பழங் கல்வெட்டுக்களில் வழங்கிவந்த கிரந்த எழுத்துக்களுடன் நெருங்கிய தொடர்புள்ளதாக இருக்கவேண்டும் என்று ஹாலந்து நாட்டு வரலாற்றுச் சாசன ஆராய்ச்சி நிபுணரான டாக்டர் வோகெல் (Dr. Vogal) கருதுகிறார்" (கலைக்களஞ்சியம்).

பாலித்தீவு இன்றும் இந்தியப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் காப்பாற்றி வருகின்றது. பாலி மக்களில் ஆண்களும் பெண்களும் மாலைக்காலத்து இராமாயணம் பாரதம் என்னும் நூல்களைப் படிப்பதைக் கேட்பதற்குக் கோயில்களுக்குச் செல்கிறார்கள். இலக்குமியும் சத்தியபாமையும் இருபக்கங்களில் நிற்கும் திருமாலின் திருவுருவம் ஒன்று பாலித்தீவிற் கண்டு பிடிக்கப்பட்டது.

திரு. ந. சி. கந்தையாபிள்ளை

---

### பனங்காமம் சிவன் கோயில்

மேற்படி கோயில் திருப்பணி வேலைகள் நிறைவுற்று ஆனி உத்திரத் திருநாளில் கும்பாபிடேகமும் செய்யப் பெற்றுள்ளது.

### ஐக்கியதின விழா

ஞாயிற்றுக்கிழமை இரவு சரவணை வேலணை மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டப முன்றிலில், ஷெ சங்க ஆதரவில் ஐக்கிய தின விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஐக்கிய இயக்கம் பற்றிய பேச்சுக்களும், மாணவர்களின் பேச்சுப் போட்டி, கதம்ப நிகழ்ச்சிகள் முதலியவையும் இடம்பெற்றன. "வழி தெரிந்தது" என்ற சமூக நாடகம் கலையரசு சொர்ணலிங்கம் நாடகக் குழுவினரால் சிறப்பாக நடித்துக் காண்பிக்கப்பட்டது.

---

### ஏந்திர கைத்தொழிற் சமாசம்
### வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

பின்வரும் வேலைகள் செய்யப் பொறுப்பேற்கின்றது.

எல்லாவித நீர்க்குழாய்கள் (வாட்டர் பம்ஸ்), தட்டெழுத்து யந்திரங்கள், தையல் யந்திரங்கள், மின்சாரத்துறைப் பொருள்கள் (இலெக்றிக்கல் அப்பிளையன்செஸ்) உதாரணமாக;

(அ) மோட்டார்கள், மின்சத்தி ஆக்கக் கருவிகள் (ஜெனறேற்றேஸ்) உஷ்ண ஆக்கக் கருவிகள் (ஹீற்றேஸ்) பட ஒளிப் பதிவுக்கருவிகள் (சினிமா புரேஜெக்ரேஸ்) முதலியவைகளின் திருத்தம்.

(ஆ) தராதரம்பெற்ற மின்சார வேலை வல்லுனரால் வீட்டுக்கு மின் சாரக்கம்பியமைத்தல்,

(இ) பேர்ப்பலகைகள், அறிகுறிப்பலகைகள் (சயின்போட்ஸ்) மைதீட்டியமைத்தல்.

---

### கோட்டு விற்பனவு விளம்பரம்

மீசாலை மீசாலை தெற்கு வேலுப்பிள்ளை திருநாவுககரசு
வழக்காளி
எதிராக
இல. 1887 / B.
வெள்ளாம்போக்கட்டி தற்போது துனுக்காய் சோமசுந்தரம் வயிததிலிங்கம் உபதபாற்கந்தோர். எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1887/B ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக கப்படும் ஒரு துண்டுக காணியை 1960 ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 8 ம் திகதி (8-8-60) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 1380ம், இதில் ரூபா 1000க்கு 26-10-59 திகதி தொடக்கம் 16-2-60 திகதி வரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 184-82 சதம்.

காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி கச்சாய்க் கோவிற்பற்று அல்லாரையிறை "குடியிருத்த வளவு" நிலப்பரப்பு $8\frac{1}{4}$ ம் மற்றும் பயிர்களும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் [illegible] வடக்கு வல்லி கைம்பெண கதிரியின் ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை. இதடங்கலும்.
முற்பதிவு E 220 / 210,

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, & Valuer.
Licensed Auctioneer
தெல்லிப்பழை 16-6-1960.
(M. 66 15-7-60)






---

## உங்கள் நக்ஷத்திரம்?

[ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது] எங்கள்சோதிடம்
இவ்வாரப் பலன்கள் 17-7-60—23-7-60

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

உம்முடைய சொந்தத் துன்பங்கள் சில இந்த வாரம் அற்றுப்போகும். பணத் துறையில் நல்ல வாரம் நண்பர் அதிக உதவியாயிருப்பர் ஆனால் தேக சுகம் இன்னமும் சிக்கலாயேயிருக்கும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3. 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

நண்பர்கள் இந்த வாரம் உம்மை இடைஞ்சல்களிலிருந்து நீக்குவார்கள். உம்முடைய இளைய சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 4ம் பாதம்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் நீக்கப்படும். தனலாப்ங்களும் பகைவர் அழிவும் நிச்சயம். புது முயற்சிகள் தாமதிக்கப்படும். ஆனாற் சித்தியாகும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்,

இந்த வாரம் மனச் சமாதானமிருக்கமாட்டாது. சிறு சுகவீனங்களுமுண்டாகக் கூடும். ஆனால் தனலாபங்கள் நிச்சயம். உம்முடன் போட்டியிடுவோரை நீர் வெல்லக் கூடியதாயுமிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தேகசுகம் சிக்கலாயிருக்கும். குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும். பிதாவழி இனத்தவர் சண்டைதொடுத்து நிற்பார்கள். ஆனால் உத்தியோகத்துறையில் நல்ல வாரம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஞாயிறும் திங்கள் காலையும் கவனமாய்க்கழிக்க வேண்டும். இனத்தவர்களுடனும் நண்பர்களுடனும் முரண்பாடுகளுக்கிடமுண்டு. சிறு சுகவீனங்களுக்கும் இடமுண்டு. நடு வாரத்தின் பின் நிலைமைகள் திருந்தும்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பதாம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

முன் அரைவாரம் குழப்பமாயிருக்கும். திங்கள் செவ்வாய் புதன் கவனமாய்க் கழிக்கவேண்டும் வார மிகுதி ஒரு அளவுக்கு நல்லாயிருக்கும். ஆனால் தேகசுகம் தொடர்ந்து சிக்கலாயிருக்கும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பணத்துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகளின்மூலம் நீர் அதிக இலாப மடையக்கூடியதாயிருக்கும். ஆனால் புதன் பிற்பகல் வியாழம் வெள்ளி கவனமாய்க் கழிக்கவும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் சுகவீனங்களுக்கிடமுண்டு. கருமங்கள் நீர் விரும்புகிறபடி செய்ய முடியாமலிருக்கும். உணர்ச்சிக்குழப்பங்களிருக்கும், பிதாவழி இனத்தவர்மூலம் தொந்தரவுகளுக்கும் இடமுண்டு. வாரத்தின் கடைசி நாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மகாராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்பச் சூழலில் இந்த வாரம் பிழை எண்ணங்களுக்கிடமுண்டு. தேகசுகமும் திருத்தியாயிராது. செலவுகள் வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

குடும்பக் கருமங்கள் இந்த வாரம் குழப்பமாயிருக்கும், ஆனால் உத்தியோகத்துறையில் நல்ல வாரம். பகைவர் அழிவும் காணிப்பொருள்கள் மூலம் இலாபங்களும்நிச்சயம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி

நீர் இந்த வாரம் முயன்றுழைக்கவேண்டும். பொறுப்புகள் வழக்கத்திலும் கூடுதலாயிருக்கும். பணத்துறையில் நல்ல வாரம். போட்டியிடுவோரை வெல்லுதல் நிச்சயம்.

---

### ஸ்ரீ. கோணேசர் ஆலய நிர்வாகம்

ஸ்ரீ கோணேசர் ஆலயத்தின் நிருவாகப்பொறுப்பை அகில இலங்கை நிர்வாகசபை ஒன்றின் பொறுப்பில் விடுதல் நன்று. அப்படிச் செய்தால் தான் இக்கோயில நன்கு நடைபெறும் என்று குறித்த கோயிற் சேவைத்துறையில் பலவாறு தொண்டாற்றி வருகின்ற வைத்திய கலாநிதி திரு. டபிள்யு. பாலேந்திரா கருத்து வெளியிட்டுள்ளார்.

### மகோற்சவங்கள்

சுதுமலை வடக்கு ஈஞ்சடி வைரவர்கோயில் ஆடி 1உ (16-7-60, சனிக்கிழமை தேர்,

ஆடி 2உ தீர்த்தம்; மட்டக்களப்பு அன்னநகர் சித்தி வீநாயகர் கோயில், தம்பன் கடவை சித்திர வேலாயுதர் கோயில், மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோயில், திருக்கோவில்,

ஆடி 7உ (22-7-60) வெள்ளிக்கிழமை தேர் ஆடி 8 உ

தீர்த்தம். இராமேச்சரம் அம்பாள் கொடியேற்றம். ஆடி 3உ திங்கட்கிழமை (18-7-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ஐக்கிய இலாபநிதி

**1918-ம் ஆ ஸ்தாபிதமானது**

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா

**616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

தினசரிப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

Std 14


## Commission Sale

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்.

இல, 6194

வழக்காளி:

1. வல்லிபுரம் சிவசிதம்பரம்
2. வல்லிபுரம் மகள் சிவசோதி மலர், இவர்கள் இருவரும் பராயமற்றவர்கள், பராமரிப்புக்காரன் ஆள்வாப்பிள்ளை விலயினர் துன்னலை தெற்கு.

எதிராக

எதிரிகள்:

1. பருத்தித்துறை விநாயகமூர்த்தி மயில்வாகனம்
2. இருபாலை வேலாயுதம்பிள்ளை சிவகுருநாதர். தற்காலம் கல்லோயா விஸ்தாரிப்பு நிலையம் அம்பாறை (Galoya Development Board Amparay)
3. ஷை பெண் இராசநாயகி.

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட கொம்மிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் காணும் ஆதனங்கள் 1960-ம் ஆண்டு ஆவணிமீ 20-ம்உ சனிக்கிழமை (20 - 8 – 60) முற்பகல் 9 மணி தொடக்கம் குறித்த ஆதனங்களினிடமாக இருந்து என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன இடாப்பு

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறை கோயில்பற்று: பருத்தித்துறை மழவாய குறிச்சியிறை கோம்பைக்கலட்டி வி. பர. 14¾. இதுவும் பருத்தித்துறை சிங்கபாகு தேவன் குறிச்சியிறை திணைக்கலட்டி வி, பர. 9⅜. இதுவும் தற்காலம் ஒரே துண்டாயிருக்கின்றன. இதற்கு உலாந்தா மேஸ்தர் கதிர்காமர் கணபதிப்பிள்ளையால் 1932-ம் ஆ பங்குனிமீ 25-ம்உ 5764-ம் இலககத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி வி, பர. 25 குளி 3 26/32. இதில் குறித்த படத்தில் 3-ம் நம்பர்த்துண்டுக்கு வி. பர. 4 குளி 1 8/32-ம் இதற்குட்பட்ட புதிதாய் கட்டிய கல்வீடு குசினி (Garage) கட்டிடம் பனைகள் தென்னைகள் கிணறு இன்னும் இதைச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு குறித்த படத்தில் கண்ட -ம் நம்பர் துண்டு. வடக்கு ஒழுங்கை, மேற்கு குறித்த படத்தில் கண்ட 2-ம் நம்பர் துண்டு தெற்கு வயிரவிப்பிள்ளை சீனியருக்கும் மறுபேருக்குமுடையவாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

2. ஷை யிறை வென்றிபாகு தேவன் குறிச்சியிறை சல்லிமணல் வி. பர, 32 குளி 1 7/8 இதில் வி. பர. 6 குளி 4 3/8. இதில் வடக்குப்புறமாக மூன்றிவிரண்டு பங்குக்கு வி. பர. 4 குளி 2 11/12 கல்வீடு கிணறு தென்னைகள் பனைகள் வேம்புகளும். எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், வடக்கு நாகலிங்க முதலியார் வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், மேற்கு ரோட்டு, தெற்கு சக்கரியஸ் பெண் சவீனம்மாவின் உரிமைக்காரருக்குடைய ஆதனம், இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்,

3. தெற்குப்புறமாக மூன்றிலொரு பங்குக்கு வி. பர. 2 குளி 1 11/24ம் புதிதாய்க்கட்டப்பட்ட கல்வீடு தென்னைகளும் எல்லை கிழக்கு நீக்கிலான் சகாயனுக்குரியவாதனம். வடக்கு மேற்கூறிய 2-ம் ஆதனம், மேற்கு ரோட்டு. தெற்கு மரியாம்பிள்ளை பாவிலுப்பிள்ளைக்கும் மறுபோருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவைகளில் என்னல் கட்டப்பட்ட கல்வீடு நிந்தமாகவும் நிலம் தென்னைகளில் சொரியலாய் எட்டிலேழு பங்கும்,

| | |
|---|---|
| தீர்வைத்தொகை:- | 28,545-00 |
| வட்டி 8 வீதம் 2700-00 ரூபாவுக்கு 26-11-58 தொடக்கம் 29-5-59 வரை | 680-00 |
| வட்டி 5வீதம் 29,225-00 ரூபாவுக்கு 29-5-59தொடக்கம் இறுக்கும்வரை | 653-00 |
| செலவு பணத்தில் ஓர் பகுதி | 300.00 |
| மொத்தம் | 30,183-00 |

கா. முத்துக்குமாரு ஐயர்
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales&Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை. 10-7-60.
M 72 15-7-60.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 5347-ம் இலக்கப் பிரிவிடல் வழக்கில் 1960-ம் ஆ ஆடிமீ 7-ம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் இரண்டு துண்டுகள் 1960-ம்ஆ ஆவணிமீ 25-ம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 8-30 மணி தொடக்கம் அந்தந்தத் துண்டுக்குள் நின்று முதலாவதாக மதிப்பின்படி காணிப் பங்காளருக்குள்ளும் பங்காளர் மதிப்பின்படி கேள்விக்காரராக இல்லாவிட்டால் பிரசித்த ஏலத்திலும் விற்கப்படும்.

விபரம்

கரணவாய் வடக்கு
கந்தையா சின்னத்துரை
—வழக்காளி.

எதிராக

1 ஷையூர் தற்காலம் குவாலலும்பூர் கந்தையா சின்னத்தம்பி, 2. கரணவாய் வடக்கு தம்பர் கந்தையா, 3. ஷையூர் பொன்னையா சின்னத்துரை, 4, பெண் தங்கம்மா, 5. வல்லிபுரம் பொன்னையா, 6. (இறந்தது) பெண் இலட்சுமி, 7. தம்பர் சீனிவாசகம், 8, பொன்னு செல்லையா, 9. பெண் செல்லம்மா, 10, வல்லிபுரம் கிருஷ்ணபிள்ளை, 11. பெண் அன்னலட்சுமி, 12. முருகேசு சுப்பிரமணியம், 13. பெண் மதுரைமீனாட்சி, 14. பொன்னையா வேலுப்பிள்ளை, 15. பெண் மகேஸ்வரி, 16. கனகரத்தினம் சோதிலிங்கம். 17. அருளம்பலம் தங்கராசா, 18 ஷையூர் தற்காலம் குவாலலும்பூர் வேலுப்பிள்ளை பொன்னையா, 19. வேலுப்பிள்ளை செல்லையா, 20. (இறந்தது) வேலுப்பிள்ளை ஆறுமுகம், 21. வேலுப்பிள்ளை மகள் பொன்னம்மா, 22. அல்வாய் வடக்கு தம்பையா நாகலிங்கம். 23. பெண் சின்னம்மா, 24. கரணவாய் வடக்கு தப்பையா வயித்திலிங்கம், 25. பெண் தங்கம்மா. 26, (இறந்தது) வல்லிபுரம் சின்னத்தம்பி, 27. நல்லதம்பி ஆறுமுகம், 28. மயில்வாகனம் சின்னத்தம்பி, 29. பெண் சின்னப்பிள்ளை, 30, மயில்வாகனம் சின்னத்தம்பி, 31, பெண் வள்ளிப்பிள்ளை, 32. கணபதியார் முருகேசு, 33. (இறந்தது) பெண் அபிராமிப்பிள்ளை, 34. கார்த்திகேசு கந்தவனம், 35. பெண் பாறுபதி அம்மை, 36. கனகரத்தினம் கைம்பெண் பொன்னம்மா, 37 சபாரத்தினம் சுப்பிரமணியம், 38. வல்லிபுரம் கைம்பெண் தங்கம்மா, 45, பொன்னையா இராசையா, 46. பொன்னையா கனகரத்தினம், —எதிராளிகள்.

ஆதனம்

பொலிகண்டிக் குறிச்சியிறை வடலித்தோட்டம். நில. பர. 6. குளி 7 2/32 இது உலாந்தா வே.சிவரத்தினத்தால் 22-2-1960 திகதியைக்கொண்ட 2032 – ம் இலக்கப்படத்தில் 1–ம், 2–ம், 3-ம் துண்டுகளாக விபரிக்கப்பட்டிருக்கிறது இதில்

(1) 1-ம் துண்டுக்கு நில பர. 2. குளி 17 11/32, அதற்குச் சேர்ந்தவைகளும், எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு பொலிகண்டிக கந்தசாமி கோயிலுக்குடைய ஆதனம், மேற்கு அண்ணமலை பெண் இரத்தினத்துக்கும மறுபேருக்குமுடையஆதனம், தெற்கு 2–ம் துண்டு. இது முழுவதும், பெறுமதி ரூபா 1816-80,

(2) 2-ம் துண்டுக்கு நில. பர. 3. குளி 6 27/32. அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை கிழக்கு ரோட்டு, வடக்கு 1-ம் துண்டு, மேற்கு கணபதிப்பிள்ளை முருகேசுவுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு அண்ணமலை பெண் இரத்தினத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், இது முழுவதும் பெறுமதி ரூபா. 2087–06,

S. C. Kanagasabai
கொம்மிஷனர்.
புலோலிகிழக்கு 12-7-1960,
M 73 15-7-60.

### பாட்டிஷன் சட்டப்படி

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை
டிஸ்திறிக்கோட்டு வழக்கு
வழக்காளி:
பெரியதம்பி வல்லிபுரம்
அல்வாய் மேற்கு.

வழக்கு இலக்கம். 6078

எதிராக

1. கந்தையா வேலுப்பிள்ளை
2. பெண் குஞ்சுப்பிள்ளை
3. கந்தையா வயிரமுத்து
4. பெண் கற்பகம்
5. பொன்னையா சபாரத்தினம்
6. பொன்னையா தேவருசா
7. சந்தவனம் ஆறுமுகம்
8. சிங்கர் சிதம்பரப்பிள்ளை
9. பெரியதம்பி சிதம்பரம்
10. வேலாயுதர் பெரியதம்பி
11. கந்தையா கிட்டிணபிள்ளை அல்லது கந்தையா கிட்டினையா
12. கந்தையா கணபதிப்பிள்ளை தனக்காகவும். 11-ம் எதிரிக்குத் தத்துவகாரனகவும்
13. சிதம்பரப்பிள்ளை வல்லிபுரம்
14. பெண் அன்னம்மா
15. சின்னச்சி கைம்பெண் N, சின்னையா
16. பெரியதம்பி கந்தவனம்
17. சீனியர் சிதம்பரப்பிள்ளை
18. பெண் தெய்வானை
19. பெரியதம்பி தம்பையா
20. பெரியதம்பி ஆறுமுகத்தின் மகள் பரவேஸ்வரி. இவர்கள் எல்லோரும் அல்வாய் மேற்கு.

—எதிரிகள்.

மேற்குறித்த இலக்கப் பாட்டிசன் வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் அக்கோட்டால் அனுமதிக்கப்பட்ட விற்பனை நிபந்தனைகளின்படியும் அவ்வழக்கில் கோட்டால் எனக்கு அனுப்பப்பட்ட அதிகாரப்பத்திரத்தின்படியும், உலாந்தா மேஸ்தர் ப. சிவரத்தினம் அவர்களால் 1958-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 19-ம் தேதி 1883–ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தில் 1, 2, 3. 4, துண்டுகளாகக் காட்டப்பட்டும், பின்னல் காணும் டாப்பில் விபரிக்கப்பட்டிருககும் ஆதனங்கள் 1960-ம் ஆண்டு ஆவணி மாசம் 17 தேதிபுதன்கிழமைபிற்பகல்3மணி தொடக்கம் குறித்த ஆதனங்களினிடமாக இருந்து முதலாவதாகக் கோட்டால் அனுமதிக்கப்பட்ட மதிப்புக்குக் குறையாத விலைக்குப் பங்காளர்களுக்குள்ளும் அவ்விதம் பங்காளிகள் அம்மதிப்புக்குக் குறையாத விலைக்கு வாங்கத் தவறின் உடனேயே பிரசித்த ஏலத்திலும் என்னல் விற்கப்படும்.

ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி கட்டைவேலிக் கோயிற்பற்று அல்வாய் மணிவீரவாகுதேவன் குறிச்சி தனிப்பனையடி. நிலப்பரப்பு 16 குளி 11/32 இது உலாந்தா மேஸ்தர் ப. சிவரட்டிணம் அவர்களால் 2035–ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்ட படத்தின்படி உடையது. எல்லை கிழக்கு K நடராசாவுக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கு P. வல்லிபுரத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், மேற்கு P. வல்லிபுரத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு V. சின்னத்தம்பிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இதில்,

(1) ஒராம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 3 குளி 14 1/32.. எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2-ம் நம்பர்த்துண்டு, வடக்கும், மேற்கும் P. வல்லிபுரத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம், தெற்கு குறித்த படத்தில் 5–ம் நம்பர்த்துண்டு இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 896-88.

(2) இரண்டாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 3 குளி 14 1/32. எல்லை கிழக்கு K. கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், வடக்கு S. சபாபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், மேற்கு 4-ம், 5-ம் நம்பர்த்துண்டுகள், தெற்கு குறித்த படத்தில் 3-ம் நம்பர்த் துண்டு. இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா: 1140-88.

(3) மூன்றும் நம்பர்த்துண்டுக்குரிய நிலப்பரப்பு 3 குளி 14 1/32. எல்லை கிழக்கு குறித்த படத்தில் 4–ம் நம்பர் துண்டு, வடக்கு குறித்த படத்தில் 2-ம், 5-ம் நம்பர்த்துண்டுகள், மேற்கு குறித்த படத்தில் 5-ம் நம்பர்த் துண்டு, தெற்கு குறித்த படத்தில் 5–ம் நம்பர்துண்டு. இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 1909-46.

(4) நாலாம் துண்டுக்குரிய நிலப்பரப்பு 3 குளி 14 1/32. எல்லை வடக்கு K. கணபதிப்பிள்ளைக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், மேற்த குறித்த படத்தில் 3–ம், 2–ம், 5–ம் நம்பர்த் துண்டுகள். தெற்கு V சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடையவாதனம், கிழக்கு K நடராசாவிற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம். இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதப்பு ரூபா 2095–96.

(5) ஐந்தாம் நம்பர்த் துண்டுக்குரிய நிலம் குளி 16 7/32. எல்லை கிழக்கு குறித்த படத்தில் 2-ம், 4-ம் நம்பர்த்துண்டுகள், வடக்கு குறித்த படத்தில் 1-ம், 3-ம் நம்பர்த்துண்டுகள், மேற்கு P. வல்லிபுரத்திற்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், தெற்கு V, சின்னத்தம்பிக்கும் மறுபேருக்கும் உடைய ஆதனம், குறித்த 5-ம் நம்பர்த்துண்டு, குறித்த படத்தில் 1-ம், 2–ம், 3-ம், 4-ம் நம்பர்த் துண்டுகளுக்குப் பொதுப்பாவிப்புக்காக விடப்பட்ட ஒழுங்கை. இதற்கு கோட்டால் அனுமதிக்கப்பட்ட விலை மதிப்பு ரூபா 180–14.

கா, முத்துக்குமாருஐயர்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
Commissioner of Sales & Valuer.
சந்நிதிவேல்,
பருத்தித்துறை, 9-7-1960.
M. 71 15-7-60.


இழந்த பலத்தைத் திரும்பக் கொடுக்கிறது!

## பலவிருத்திக் குளிகை

இது ஆச்சரியமான குணம் உடையது

அசதி, பலவீனம், உடல்மெலிவு, நரம்புதளர்ச்சி, மறதி தாது பலவீனம் முதலியவைகளை நீக்கி புதிய இரத்தத்தை நரம்புகளுக்குள் புகுத்தி இழந்துபோன பலத்தையும் வலிமையையும் மீட்டிக் கொடுத்து வாழ்க்கையை வளம்பெறச் செய்விக்கிறது. 120 குளிகை புட்டி 1 க்கு ரூ, 12-00,

## மூல வியாதிக்கு

நாக பஸ்பம், கருணை லேகியம் சாப்பிடுங்கள்
ஆப்ரேஷன் அவசியமில்லை. முளை தானே கரைந்துவிடும்.

சீழ் மூலம், இரத்தமூலம், மலபந்தம், குத்தல் கடுப்பு முதலிய 9-வித மூல வியாதிகளும் குணமாகிறது.

பஸ்பமும், லேகியமும் 24 நாள் செட் விலை ரூ. 20-00

மலையப்பசாமி வைத்தியசாலை பழனி S.I.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனருக்குப் புதிய பெயர்

## கல்வெட்டொன்றில் ஆராய்ச்சிக் கலைஞர் கண்டு பிடித்தமை

சிதம்பரம் ஜூலை – 2,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ்த்துறை ஆராய்ச்சியாளரான "கல்வெட்டு ஆராய்ச்சிக் கலைஞர்" வித்துவான் ஸ்ரீ வை. சுந்தரேசவாண்டையார், சமயாசாரியர் நால்வர்களிலொருவரான ஸ்ரீ திருநாவுக்கரசுநாயனருக்கு "குளித்து எழுந்த நாயனர்" என்னும் அருமையான பெயருள்ள பழங்கால கல்வெட்டைக் கண்டு பிடித்துள்ளார்.

ஸ்ரீ திருநாவுக்கரசர் தமது அருண்மொழிகளால் பொதுவாக எல்லாவுலகமும் சிறப்பாகத் தமிழ்நாடும் உய்யத் தோன்றியருளியவர்; சித்தம் சிவமாகி நின்ற திறத்தால் நினைத்தற்கு அரிய வியத்தகு செயல்கள் பல செய்தவர்; சிவம்பெருக்கும் தமிழ்மறை பகர்ந்தவர்; இவருக்குச் சேக்கிழார்பெருமான், தாண்டகவேந்தர், உழவாரப் படையாளி முதலான பெயர்களைக் குறிப்பிட்டுள்ளனர் எனினும் திருப்புகலூர் கல்வெட்டில் குளிச்ச எழுந்த நாயனர் என்ற புதிய பெயர் கிடைக்கப்பட்டுள்ளது; இக் கல்வெட்டு சுமார் 700 ஆண்டுகளுக்கு முற்பட்டுள்ளதாகும்.

திருநாவுக்கரசர் சிவபெருமான் கட்டளைப்படி இமயமலையில் ஒருகுளத்தில்மூழ்கி ஐயாற்றில் (திருவையாறு) ஓர் வாவியில் வந்து தோன்றினர் என்பதை,

சேக்கிழார் பெருமான்,
'போதமாதவர் பனிமலர்ப்
பொய்கையில் மூழ்கி
மாதொர் பாகனர் மகிழும்
ஐயாற்றிலோர் வாவி
மீதுதோன்றிவந் தெழுந்தவர்
உலகெலாம் வியப்ப''

என்னும் அடிகளால் விளக்கியுள்ளார், திருநாவுக்கரசுப் பெருந்தகையாரும் "யாதும் சுவடு படாமல் ஐயாறடைகின்றபோது" என்று திருவாய்மலர்ந்தருளியுள்ளார் இக் கருத்தை உட்கொண்டே திருநாவுக்கரசுப் பெருந்தகையாருக்கு "குளித்து எழுந்த நாயனர்" என்னும் திருப்பெயர் நிலவுவதாயிற்று.

இக் கல்வெட்டு செந்தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூர் ஜில்லா, நன்னிலம் தாலுக்காவிலுள்ள திருப்புகலூர் அக்னீசுவரர் கோயில் இரண்டாம் கோபுரத்தின் தென்பால்மதிலின் கீழ்புறச் சுவரில் இருக்கின்றது. இக் கல்வெட்டுச் சிதைந்திருக்கின்றது. இக்கல்வெட்டு இதுகாறும் தென் இந்தியக் கல்வெட்டுத் தொகுதியில் வெளிவராததாகும். சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு திருநாவுக்கரசுப்பெருந்தகையாருக்குக் கட்டப்பட்டுள்ள செங்கல் திருப்பணிக் கோயில் இன்றும் செங்கல் திருப்பணிக் கோயிலாகவே காட்சியளித்து வருகின்றது.

இந்த க்ஷேத்திரத்தில்தான் திருநாவுக்கரசர் இறைவனின் திருவடிப்பேற்றை அடைந்துள்ளார்.

(திரு. மா, பா, தினமணிசிருபர்)

### திரு. மு. சுவாமிநாதன் ஜே. பி. அவர்களுக்கு உபசரணை

=0=

கோப்பாய் மத்திய கலவன் சைவவித்தியாசாலை அதிபர் திரு மு சுவாமிநாதன் அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் சூட்டப் பெற்ற தொடர்பில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் சேர். கந்தையா வைத்தியநாதனவர்கள் தலைமையில் ஓர் உபசரணை விழா சிறந்த முறையிற் செய்யப்பெற்றது.

தலைவரவர்களுடன், பெரும்பாக வித்தியாதரிசியாயிருந்து இளைப்பாறுகின்ற திரு. எஸ். தியாகராசா, நியாயவாதி திரு.எம. பாலசுந்தரம், முதலியார் அத்தியார் அருணசலம், திரு. கு. அம்பலவாணபிள்ளை பி ஏ. திரு. எஸ். ஜே. குணசேகரம் எம், ஏ, திரு க. இராசரத்தினம் பி. ஏ. திரு. இ நாகலிங்கம் வித்தியாசாலை அதிபர் முதலிய பல பெருமக்கள் திரு. சுவாமிநாதனவர்களின் சிறந்த பல சேவைகளைக் குறிப்பிட்டுப் பலவாறு பாராட்டினர்கள்.

நடனம், அபிநயம் முதலிய நிகழ்ச்சிகளுடன் விழா நிறைவுற்றது.

—

### நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராசேஸ்வரி அம்பாளின் சங்காபிஷேகம்


ஆனி 30 — 31உ (14—15-7 60) புதன், வியாழக் கிழமைகளில் மேற்படி கோயிலில் அநுஞ்ஞை மகா யாகபூசை முதலியவை நடைபெற்றபின் மகா சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. பின்பு அம்பாள் வீதிவலம் வந்தருளினர். பக்தர்கள் பெருந்தொகையினர் திருத்தொண்டு செய்து வழிபாடாற்றினர்.

### புதிய சமாதான நீதவான்



கூட்டுறவுப் பகுதி சமூக சேவைப் பகுதி சுகாதாரப் பகுதி, பாடி காவலர் பகுதி முதலிய வாய்வரும் இந்நாட்டின் பொது நலசேவைப் பகுதிகள் ஒவ்வொன்றிலும் முன்னணியில் நின்று பெரும்பணி ஆற்றிவருபவரும் சைவபரிபாலன சபையின் தனதிகாரியாய்ச் சென்ற பத்து ஆண்டுகளாகச் சிறந்த சேவை செய்து வருபவருமாகிய முகாந்திரம் இ பொ. இராசையா அவர்கள் யாழ்ப்பாணப்பிரிவுச் சமாதான நீதவானய் நியமிக்கப் பெற்றுள்ளார்.

### சமாதான நீதவான் திரு. தில்லையம்பலத்துக்கு வரவேற்பு



நியாயவாதி திரு. எஸ் ஆர். கனகநாயகமவர்கள் தலைமையில் சங்கரத்தையில் சமாதானநீதவான் திரு ஏ. தில்லையம்பலமவர்களுக்குச் சிறந்த வரவேற் பசாரமொன்று செய்யப்பெற்றது.

சமயம் சமூகம் மொழி முதலிய பல பொதுநலத் துறைகளில் சிறந்த பல சேவைகள் செய்துவருகின்றார் திரு. தில்லையம்பலமவர்கள். சத்தங் காட்டாது அவர் செய்துவரும் பெருஞ் சேவைகள் மிகப் பல. மேலும் பெரும்புகழ்மாலைக் குரியராய் அவர் விளங்குகின்றார் என்பனவாய் வரும் பாராட்டுரைகளை அரசாங்க அதிபர் திரு. ம. ஸ்ரீகாந்தா, பெரும்பிரிவு நீதிபதி திரு. பி, ஸ்ரீஸ்கந்தராசா, சமாதான நீதவான் திரு. வி. நாகலிங்கம் வித்துவான் க. கி. நடராசன் முதலிய அறிஞர்கள் வாரி வழங்கினர்கள்.

முதலியார் திரு செ. சின்னத்தம்பியவர்கள்வரவேற்புரை கூறினர்கள்.

——

### இந்துக்கல்வி நிலையங்களிற் குறைபாடு

——0——

#### காரணங் காட்டுகின்றர் பேராசிரியர்

சென்ற சனிக்கிழமையிரவு புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் வருடாந்தப்பரிசளிப்பு விழா வைத்தியகலாநிதி திரு. க. சிவஞானரத்தினமவர்கள் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் திரு. ஏ. சின்னத்தம்பியவர்கள் பிரதம விருந்தினராகச் சமுகமளித்திருந்தார்கள். அவருடன் வடமாகாண அரசாங்க உதவி அதிபர் திரு. ஏ. தெட்சணமூர்த்தியவர்களும் சமுகமளித்திருந்தார்கள்.

பேராசிரியர் திரு. சின்னத் தம்பியவர்கள் பேசும்போது வடபகுதியின் இந்துக் கல்வி நிலையங்கள்பற்றிய உண்மையொன்றை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

வடபகுதியிலுள்ள இந்துக் கல்வித் தாபனங்கள் சிலவற்றில் மாணவர் கட்டுப்பாடும் ஒழுங்கும் குறைந்திருக்கக் காணப்படுகின்றனர். இந்நிலைமைக்குக் காரணர் அந்நிலையங்களின் தலைவர்களே யாவர். சில இந்துக் கல்வித் தாபனங்களின் அதிபர்கள் அத்தாபனங்களின் நோக்கமாயமைந்த இலட்சியங்களைப் பின்பற்றத் தவறிவிட்டார்கள். இது வருந்துதற்குரியதாகும். தங்களிடம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியாய்த் தலைமை ஆசிரியர்கள் விளங்கவேண்டியவர்களாவர்; ஆனல் அவ்வாறிருக்க அவர்கள் தவறிவிட்டார்கள், முன்மாதிரி காட்டுதற்குப் பதிலாய் அவர்கள் மாணவரைத் தவருன பாதையிற் செலுத்துபவர்களாயிருக்கிருர்கள் என்று அவர் பேசும்போது குறிப்பிட்டார்.

## அறிவித்தலுக்கு மறுப்பு

17-6-60 ஆம் திகதி வெளியான இந்துசாதனப் பத்திரிகையின் 5-ம் பக்கத்தில் "அறிவித்தல்" என்னும் தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட கரவெட்டி கிழக்கு யாக்கரு சித்தி விநாயகராலய மனேச்சர் நியமனத்தை ஷை ஆலய சொந்தக்காரர் என்ற கோதாவில் இத்தால் மறுக்கிறேம்.

இவ்வாலய உரிமை கொழும்பு உயர்தர நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி எங்களுக்கே சொந்தமானதென்பதை மேலும் பிரகடனம் செய்கிறேம் இவ்வாலயம் எங்களது ஆட்சியில் இன்றும் இருக்கிறது. மேற்படி ஆலய பரிபாலன சபையின் ஆதரவில் செவ்வனே பரிபாலிக்கப்பட்டு வருகிறது. மேலும் இவ்வாலய பரிபாலனத்தைப்பற்றி எங்களைத்தவிர வேறெவரும் பிரசுரிக்கும் பிரசுரங்கள் பெறுமதியற்றதென்பதையும் இத்தால் வெளிப்படுத்துகின்றேம்.

ஷை கோவில் சொந்தக்காரர்;
ச. இ[illegible]சபாபதி,
அ. உ[illegible]பதி.

கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி
13-7-60.

M 78 15-7-60.

### ஸ்ரீநடராசமூர்த்திக்கும்......

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

20 பவுன் எடையில் இரு தங்கத்தோடாக்கள் செய்து கொடுத்துள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

திருக்கயிலாய பரம்பரைத் தருமபும் ஆதீனம் 25 வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 2!-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளும இத்திருவிழாக்களில் வழக்கம்போற் பங்குபற்றினர்.

(திரு. மா, பா, தினமணிநிருபர்)

### இந்திய வேலை நிறுத்த நிலைமை

இந்திய வேலை நிறுத்தம் தொடர்ந்து நடக்கின்றது. ஆனல் சில இடங்கள்தவிர நிலைமை பொதுவாகத் திருந்தி வருகின்றதெனக் கூறப்படுகின்றது.

"அன்பிலா ரெல்லாம்
தமக்குரியர் அன்புடையார்
என்பு முரியர் பிறர்க்கு"

### சாவகசசேரியில் முத் தமிழ் விழா

தென்மராட்சி முத்தமிழ்க் கலை மன்றத்தினரின் முத்தமிழ் விழா சென்ற சனிக்கிழமை சாவகச்சேரிப் பட்டின சங்கத்தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் ஆரம்பமாயது வடபகுதிக் கல்வி அதிகாரி திரு. எஸ்.யு. சோமசேகரம் இலங்கை வானெலித் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராசன் ஆகியோர் தலைமையில் விழா தொடர்ந்து நடைபெற்றது.

கலையரசு கே. சொர்ணலிங்கம் வித்துவான் பொன் முத்துக்குமாரன் முதலியோரின் சொற்பொழிவுகள், இசைப்புலவர் என். சண்முகரத்தினம் முதலியோரின் இசை விருந்துகள், திரு. எம். பஞ்சாபிகேசன் முதலியோரின் நாதஸ்வர விருந்துகள், சங்கீத பூஷணம் எஸ். விஞசித்தம்பியின் கதாப்பிரசங்கம், திரு. மா. பீதாம்பரம் முதலியோர் இயற்றிய பாடல்கள் என்பனவாய்ப் பல நிகழ்ச்சிகள் விழாவைச் சிறப்பித்தன.

மன்றத் தலைவர் திரு. இராஜ அரியரத்தினத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பித்த விழா மன்றச் செயலாளர் திரு. சி. செல்லத்துரையின் நன்றியுரையுடன் நிறைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏந்திர கைத்தொழிற் சமாசம் வரையறுக்கப்பட்டது

"த சிற்றடல்" சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி 617—தந்தி ரெக்நோலொஜி)

நல்லசாதி மரத்தாற் செய்யப்பெற்ற மரக்கதவுகள், சாளரங்கள் (யன்னல்கள்) பலப்பல அளவுகளில் விலக்கிருக்கின்றன. சுன்னுகம் "த பென்னின்சுலா ற்றேடிங் கோப்பறேஷன்" காட்சிப் பொருள் மண்டபங்களில் மாதிரியாயுள்ளவற்றைப் பார்வையிடலாம்.


## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் காங்கேசன் துறைறேட்டில் 207ம் இலக்க கடையில் சோம-மு-இராமநாதன் அவர்களிடம் 1-4-58ந் திகதி தொடக்கம் 31-12-58ந் திகதி வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாத வைகளை 1960ஞு ஆகஸ்டுமீ 5 உ (5-8 60) ந் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. சே. குட்டிப்பிள்ளை,

ஏலவிற்பனவுகாரரும்
விலை மதிப்பாளரும்,
13-7-60.
M 79 15, 22-7-60

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கைதடி நாவற்குளி வேலுப்பிள்ளை கைம்பெண் மாணிக்கம் - வழக்காளி,
இல. 1826

எதிராக

கைதடி
1 நமசிவாயம் சின்னத்துரை
2. பெண் கண்மணி.
எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக்கோட்டில் 1826ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகள் 1960ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 20ம் திகதி (20-8-60, சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடககம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2149-30ம் இதில் ரூபா 1600 க்கு 17-7-59 திகதி தொடக்கம் 28-3-60 திகதிவரைக்கும் 100 க்கு 12 வீத வட்டியும் பின் திகதி தொடககம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 182-90 சதம்.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளிக்கோவிற்பற்று கைதடியிறை "குன்றப்பிராயன் வயல்" நெற்பரப்பு 36ம் குளி 3 1/3 ம் ஆனல் ஆட்சிப்படி நிலப்பரப்பு 40 இதில் வடக்குப் பக்கமாக நெற்பரப்பு 20 நீக்கி மிகுதி ஆட்சிப்படி தெற்குப்பக்கமாக நெற்பரப்பு 20ம் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் ஆதனம். வடக்கு சுப்பிரமணியம் பெண் திலகம்மாவின் ஆதனம். மேற்கு அருளையா சின்னையாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு பொன்னம்பலம் தம்புவின் ஆதனம். இதடங்கலும்.

2. மேற்படி கைதடியிறை "இருளோடை வளவு" நிலப்பரப்பு 8ம் குளி 9ம் இதில் கிணற்றுககு விடப்பட்ட நிலம் குளி 4 நீக்கி நிலப்பரப்பு 8ம் குளி 5ம், இதில் மேற்குப் பக்கமாக நிலப்பரப்பு 4ம் குளி $2\frac{1}{2}$ ம் நீக்கி மிகுதி கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு 4ம் குளி $2\frac{3}{4}$ம் பயிர்களும் கிணற்றில் $\frac{2}{3}$ பங்கும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சங்கரப்பிள்ளை பெண் தெய்வானையின் ஆதனம், மேற்கு சுப்பிரமணியம் பெண் திலகம்மாவின் ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, & Valuer,
Licenced Auctioneer.
தெல்லிப்பழை, 13-6-1960.
M 68 15-7-60.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மாவிட்டபுரம்

இராமு முருகேசு கைம்பெண் கற்பகம் தானுகவும் தனது புருஷன் காலம்சென்ற இராமு முருகேசுவின் ஆஸ்திக்கு யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 365ம் இலக்கத் தத்துவ வழக்கில் தத்துவகாரியாகவும்.

-வழக்காளி

எதிராக

இல M. B. 2256

மாவிட்டபுரம் 1. வேலு கதிரித்தம்பி (மரணம்)
மாவிட்டபுரம் 2. கதிரித்தம்பி கைம்பெண் செல்லம்மா காலம் சென்ற முதலாம் எதிராளியின் ஆஸ்திக்கு பிரதிகாரியஸ்தராகவும்

-எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் M B 2256ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக்காணிகள் 1960ம் ஆண்டு ஆகஸ்டு (ஆவணி) மாதம் 17ம் திகதி (17-8-60) புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2343ம் இதில் ரூபா 1500 க்கு 2-6-58 திகதி தொடக்கம் 15-9-59 திகதி வரைக்கும் 100 க்கு 9 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100 க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 298-57 சதம். இதில் ரூபா 200 இறுபட்டது.

காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக்கோவிற்பற்று மாவிட்டபுரமிறை "மூருக்கையனடை" நிலப்பரப்பு நாலு (4ம்) செய்பயிர் வான்பயிர்களும் எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் தனபாக்கியத்திற்கும் பங்காளருக்குமூரிய ஆதனம். வடக்கு கந்தர் வயித்திலிங்கத்தின் ஆதனம். மேற்கு அப்புக்குட்டி பெண் வள்ளிப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை, இக் காணியின் கிழககெல்லையருகாக வடக்கெல்லைக்காணிக்கு தெற்கு ஒழுங்கையிலிருந்து 6 மூள அகலமுள்ள பாதை புற நீங்கலாகவும் வடக்கெல்லையில் நிற்கும் பனைகள் புறநீங்கலாகவும் மிகுதியடங்கலும் மூற்பதிவு H 226/110,

2. மேற்படி மாவிட்டபுரமிறை "முருங்கையனடை" நிலப்பரப்பு எட்டு (8ம்) வீடுகளும் செய்பயிர்வான்பயிர்களும் எல்லை கிழக்கு பளைஊரெல்லை. வடக்கு சிதம்பரன் கந்தனுக்கும் வேலன் கதிராமனுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு முத்தையா பெண் எள்ளுப்பிள்ளைக்கும் அம்பலம் தம்புவுக்கும் பங்காளருக்குமூரிய ஆதனங்கள். தெற்கு சுந்தப்பிள்ளை வயித்திலிங்கத்தின் ஆதனம். இதில் சொரியலாய் ஐந்தில் ஒரு பங்கும் (1/5ம்) இன்னும் கிழக்கீக ஊரியவத்தை என்னும் காணியில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்கால் உரித்தும் மூற்பதிவு H 245/152.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner, Valuer & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 29-6-1960.
M. 67 15-7-60.

## ஸ்ரீ நடராச மூர்த்தியின் ஆனித் திருமஞ்சன விழா

சிதம்பரம். ஜூலை 2

சிதம்பரம் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தியின் ஆனித் திருமஞ்சன விழா 6 நாட்களிலும் சிறப்புடன் நடைபெற்று வந்து 30-6-60 அன்று திருத்தேர் விழாவும், 1-7-60 விடியற்காலையில் ஆயிரக்கால் மண்டபத்தில் ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீநடராஜமூர்த்திக்கு ஆனித் திருமஞ்சன மகாபிஷேகமும் சிறப்புடன் நடைபெற்று, பகல் ஒரு மணிக்கு ஆனந்த நடனக் காட்சித் தரிசனம் கொடுத்துக் கொண்டே ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜமூர்த்தி சிற்சபைக்குள் பிரவேசஞ் செய்தருளினுர்.

தரிசன விழாவிற்கு யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 200 க்கு மேற்பட்ட சைவ சமயசீலர்கள் வந்து தரிசனம் செய்தனர்.

சிதம்பரம் ஆறுமுகநாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தருமபரிபாலகர்களில் ஒருவரான "சாகித்யகர்த்தா" பிரம்மஸ்ரீ, வி. வி. சுவர்ண வெங்கடேச தீக்ஷிதர் என்பவர் ஆச்சாரிய பூஜகராக இருந்து ஆனித் திருமஞ்சன விழாவையும் மகாபிஷேகத்தையும் சிறப்பான மூறையில் நடத்தி வைத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

(திரு. மா.பா. தினமணிநிருபர்)

## கந்தர் அநுபூதிப் பாடற்குழு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருநாட்களில் ஆலய வீதியைச் சுற்றி, கந்தர் அநுபூதிப் பாடற்குழுவொன்றினை சித்தாந்த சிரோமணி திரு. மு. ஞானப்பிரகாசப அவர்கள் நடத்துகிறுர்கள்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

தையிட்டி மயில்வாகனம் செல்லத்துரை -வழக்காளி

வழக்கு இல M B. 2303

எதிராக

பத்தைமேனி வேலுப்பிள்ளை ஆறுமுகம் -எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 2303ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1960ம் வருடம் ஆடி மாதம் 29ந் திகதி (29-7-60) வெள்ளிக்கிழமை காலை 10 30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத் தொகை :- ரூபா 731-ம், 27-6-58 தொடககம் 2-9-58 வரைக்கும் ரூபா 425 க்கு 9 வீதவட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் மூற்றுக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும்கோட்டுச்செலவு ரூபா 149-75 சதமும். இதில் ரூபா 275/- கட்டப்பட்டுள்ளது.

காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் வடக்குப் பகுதி மயிலிட்டி கோயிற்பற்று தையிட்டி இறை, (கள்ளிக்கலட்டி) நிலப்பரப்பு 15. வீடும், கிணறும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு கந்தவனம் தம்பையாவின் ஆதனம், தெற்கு விசுவர் அப்பாப்பிள்ளையின் ஆதனம். இதடங்கலிலும் சொரியலாக நான்கிலொரு பங்கும் ($\frac{1}{4}$) அதன் உடமைகளுப்.

சே. பாண்டித்துரை
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
Commissioner of Sales and Valuer
மல்லாகம் 24-6-60.
M 77 15—7—60.

## சிறுர்க்குப் பரிசுகள்

மாவிட்டபுரம் பக்திப்பாடற் குழுவினர், நாவலர் கூறியவாறு நமஸ்கரிக்கும் முறையைச் சிறுவர், சிறுமியர்களுக்குப் போதித்து, போதித்தபடி செய்கின்றவர்களுக்குச் சென்ற வெள்ளிக்கிழமை இவ்வுப் பரிசுகள் வழங்கி ஊக்குவித்தனர்.

## மணிவாசகர் விழா

வீமன்காமம் ஆங்கில பாடசாலையில் மணிவாசகர் விழா கொண்டாடப்பட்டது. விழாவிற்கு பண்டிதர் திரு. இ. நமசிவாயம் அவர்கள் தலைமை வகித்தார். பண்டிதர் திரு. வே சங்கரப்பிள்ளை அவர்கள் உரை நிகழ்த்தினர்.

## 50 செயற்கைக் கிரகங்கள்மூலம் தொடர்புகள்

3600 மைல் உயரத்தில் 50 செயற்கைக் கிரகங்களைச் செலுத்தி உலகம் முழுவதும் "டெலிபோன்", "டெலிவிஷன்" தொடர்புகள் ஏற்படுத்தப் பிரபல அமெரிக்க போக்குவரவு தொழில் ஸ்தாபனமொன்று திட்டமிட்டுள்ளது. இதற்கான திட்டமொன்றை கடந்த திங்களன்று நடந்த நிருபர்கள் மகாநாட்டில் பெல் "டெலிபோன்" ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் திரு. ஜேம்ஸ் பி. பிஸ்க் வெளியிட்டார்.

பூமியில் 13 இணைப்பு நிலையங்களை நிறுவி இத்திட்டத்தை நடைமுறைக்குக்கொண்டுவர 17 கோடி "டாலர்" செலவாகுமென தெரிவிக்கப்பட்டது.

(அ. செ)

## "கம்யூனிஸ்ட்" குறிக்கோள் மாற்றமடையவில்லை!

சர்வதேச "கம்யூனிஸம்" உலகனைத்தும் செங்கொடி பறக்க வேண்டுமென்ற குறிக்கோளிலிருந்து ஒரு பொழுதாவது ஒருபடிதானும்பின்வாங்கவில்லை என ஜனதிபதி ஐஸனேவர் கடந்த புதன்கிழமை நடந்த பத்திரிகைநிருபர் மகாநாட்டில் கூறினுர்.

அண்மையில் குருஷேவ் ஒஸ்றியாவில் "ஒருவனின் வாழ்நாள் மிகவும் குறைவு. எனது வாழ்நாளில் உலகம் முழுதும் செங்கொடி பறக்க வேண்டும்" என குறிப்பிட்டதுபற்றி நிருபரொருவர் அவருடைய அபிப்பிராயம் கேட்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(அ. செ)

## இந்திய அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம்

இந்திய அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தமொன்றுபற்றி ஊழியர் எச்சரிக்கை செய்தனர். ஊழியர்களின் வேண்டுகோள்கள்பற்றி விசாரணைக் குழு ஒன்று விசாரணை செய்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தது என்றும், அந்த அறிக்கையின்படி வேண்டியவை செய்ய அரசாங்கம் முயற்சிக்குமென்றும் அரசாங்கச் சார்பில் வர்க்குறுதி கொடுக்கப்பட்டது. ஊழியர் மேலதிகமான உரிமைகளைக் கேட்டு மேலும் வேலைநிறுத்த எச்சரிக்கை செய்தனர். நாட்டின் நலன்கருதி வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி வேண்டுகோள் விடுத்தார் பண்டித நேரு. அவ்வேண்டுகோளுக்குச் சிலர் செவிசாய்த்தனர். சிலர் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுகின்றனர். தபால், தந்திப்பகுதிகள், புகையிரதப் பகுதிகள் ஆகியவற்றைப் பாடிகாவலர் காவல்புரிகின்றனர், ஊழியர் தலைவர்கள் சிலர் கைது செய்யப்படனர். ஆயிரக்கணக்கானேர் தொடர்ந்து கைதுசெய்யப்படுகின்றனரென்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் நாவலர்வீதி, 209ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 15-7-1960 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம சிவப்பிரகாசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org